**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**S.T.C. 2499 of 2016**

**Deposition of Witness P. W.1**

| | |
|---|---|
| **Name : கார்த்திக்** | **Father/Husband's Name: பழனிச்சாமி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 07.06.2023**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் சின்னகலையமுத்தூர் கிராமநிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். 26.04.2016 ம் தேதி இரவு 22.00 மணிக்கு எனது உதவியாளர் கோபாலசுப்பிரமணி என்பவர் தகவல் கொடுத்தன் பேரில் கோரிக்கடவு பள்ளிவாசல் சுவற்றில் தேர்தல் விதிமுறைகளை மிறி உரிமையாளரின் சுவரில் அனுமதி பெறாமல் ஆஜர் எதிரி சுவர் விளம்பரம் அரசியல் கட்சி (BJP)யின் சுவர் விளம்பரம் வரைந்தவரை பார்த்து பின்பு இது சம்பந்தமாக காவல்நிலையத்தில் மறுநாள் எதிரி மீது புகார் கொடுத்தேன். தற்போது காட்டப்படும் புகாரிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **புகார் அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது காட்டப்படும் புகைபடத்தில் உள்ள விளம்பரம் தான் நான் பார்த்தது. **புகைப்படம் (2 எண்ணிக்கை) அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

2. அ.சா.ஆ.2 புகைப்படம் (2 எண்ணிக்கைகளில்) நீம்பார் என்கிற எதிரியின் பெயர் இடம்பெறவில்லை என்றால் சரிதான். எதிரி நீம்பார் கட்சியின் பொறுப்பாளர் என்பதை நிரூபிக்கும் வகையில் போலீஸ் விசாரணையின் போது ஆவணங்கள் எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் கொடுக்கவில்லை. எதிரி பொறுப்பாளர் என்று சொல்லும் நிலையில் அவர் என்னிடம் பொறுப்பாளர் என்பதற்கான மனு எதுவும் கொடுத்துள்ளாரா என்றால் கொடுக்கவில்லை. BJP தேசிய கட்சி என்றால் சரிதான். BJP

அங்கீகரிக்கப்பட்ட கட்சி என்றால் சரிதான். பொதுவாக ஒவ்வொரு தேர்தலுக்கு முன்பாக கட்சியின் சார்பில் representative list கொடுப்பார்கள் என்றால் எனக்கு கொடுக்கமாட்டார்கள். பொதுவாக representative list கொடுக்க வேண்டும் என்பது தேர்தல் விதி என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கு புள்ளியல் கணக்கிற்காக போடப்பட்டுள்ள வழக்கு என்றால் சரியல்ல. எதிரி உண்மையிலேயே குற்றம் செய்து இருந்தால் அவருக்கு எதிராக ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்பித்து இருப்பேன் என்றால் சரியல்ல.

K R KALAIVANAN Digitally signed by K R KALAIVANAN Date: 2023.06.09 16:39:21 +0530

நீதித்துறை நடுவர்,

பழனி